புதுவை குரல் புதுச்சேரி, 22 ஆகஸ்டு 2013, வியாழன்

# முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கம் சார்பில் பணிப்பட்டறை



புதுச்சேரி, அக.22-

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கம் சார்பில் தமிழ் இலக்கிய வரலாற்று தரவுகள் குறித்த பணிப்பட்டறை புதுவையில் நேற்று நடைபெற்றது.

புதுச்சேரி பிரஞ்ச் ஆய்வு நிறுவனமும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கமும் இணைந்து நடத்தும் உழைப்பும், சமூக உறவுகளும் குறித்த பணிப்பட்டறை, பிரெஞ்ச் ஆய்வு நிறுவனத்தில் நேற்று துவங்கியது.

இந்திய வரலாற்றாய்வு கழக தலைவர் பாசுதேவ் சட்டர்ஜி பணிபட்டறையை துவக்கி வைத்தார். பேராசிரியர் சுப்பராயலு, முனைவர் பியர் கிரார், பேராசிரியர் அருணன், எழுத்தாளர் தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோரும் ஆய்வாளர்கள் ரகுபதி, பெருமாள் உள்ளிட்டோரும், தொழிற்சங்க பிரதிநிதிகள் நல்லக்கண்ணு, சட்டமன்ற உறுப்பினர் சவுந்திர்ராஜன் உள்ளிட்டோரும் இந்த பணிப்பட்டறையில் பங்கேற்றுள்ளனர். வரும் 23ம் தேதி வரை நடைபெறும் பணிப்பட்டறையில், உழைப்பு, உழைப்பாளிகள், வரலாறு தரும் சான்றுகள், உழைப்பு தந்த அறிவும் உருவாக்கிய வரம்புகளும், உழைப்பாளிகளின் கலைத்திறன், அவர்களின் புலம்பெயர்வு, அவர்களின் இலக்கியம் போன்ற பல தலைப்புகளில் விவாதங்கள், கலந்துறையாடல்கள் நடந்தன. நடக்க இருக்கின்றன.